விஸ்வேஸ்வரரின் வேதனையும் விம்மலும்!

புது வாழ்க்கைத் தத்துவம் தேவை!

மாயாவாதம் மறையவேண்டும்! மெய்ஞ்ஞானம் தோன்றவேண்டும்!

அறிவியல் புரட்சியே அதற்கான மருந்து!

"நமது மக்கள் கஷ்டப்பட்டு உழைப்பதை விரும்புவதில்லை என்பதுதான் முழு உண்மையாகும். உழைப்பின் உயர்வை அவர்கள் துளியும் நம்புவதில்லை"

"நமது மக்கள், சோம்பேறித்தனமும் அலட்சியப்போக்கும் கொண்டவர்கள். தாங்கள் நினைத்தபடி எல்லாம் செயலாற்றிக்கொண்டு இருப்பார்கள். இதுதான் நாம் பின்னடைந்திருப்பதற்குக் காரணம்"

"அடிபோடி! நீ என்னமோ ரொம்ப கஷ்டப்படுகிறே? எத்தெ கொழந்தெய பெத்து ட்டா என்னடி?"

"அது செரிதான்! ஒனக்கென்ன கஷ்டம்? அதுங்கொன்னெ பெசயறபோது, என் விறல்லவோ பத்தி எரியுது?"

"கொழந்தெ பெத்துக்கிறதும் பெத்துக்காம இருக்கிறதும் நம் கையெசடி இருக்குது? எல்லாம் அவன் செயலடி!"

"அது எவென் அவன்? கொழந்தெ, அது வேணும் இது வேணும்னு அழுதா, நமக்குத்தான் அழெ பொத்துக்கிறது! அப்பொ அவெனும் காணம் இவனும் காணம்!"

"அடி போடி! முட்டா மூதெ! செடி நட்டவென் தண்ணி ஊத்தாமெ இருக்க மாட்டாண்டி! தெரியுதா, தெரிஞ்சுக!"

* * *

"உலகத்திலே காண்கிற பொருளெல்லாம் அழியக்கூடியவை! வெறும் மாயை! நம்மைப் பாழ்படுத்த - நமது அறிவைக் கெடுக்க - நமது ஆத்ம பரிசுத்தத்தைக் கறைபடுத்த - ஆண்டவனால் அமைக்கப்பட்டிருக்கிறது இவ்வுலகம். உலக சுகத்திலே மயங்கிவிடாமல், சுகபோகங்களை எல்லாம் உதறித் தள்ளிவிட்டு, மனதை ஒரு நிலைப்படுத்தி, பரம்பொருளைக் கண்டு, நிலையான ஆனந்தத்தில் மூழ்கி இன்பம் காணவேண்டும்! இதுவே மனிதராகப் பிறந்தோரின் கடமை - பிறவிப் பயன்!"

* * *

"பலன் கருதாமல் பணிபுரிய வேண்டும். கடமையைச் செய்வதுதான் உனக்கு உரிமையுண்டு. முடிவைப்பற்றிய கவலை உனக்கு இருக்கக்கூடாது."

"மக்கள் பிறக்கும் பொழுதே நால் ஜாதியாகப்பிறக்கிறார்கள். கடைசி வருணம், மற்ற மூன்று வருணத்தவர்களுக்கும் ஏவல் செய்தாக வேண்டும். அதற்கென்றே பிரத்தியேகமாக அவர்கள் பிறப்பிக்கப்பட்டு இருக்கிறார்கள். பொதுவாக, மற்ற மூன்று வருணத்தார்களும், குறிப்பாக முதல் வருணத்தாரும், நான்காவது வருணத்தாரின் உழைப்பின்மேல் உண்டு கொழுக்கவேண்டும்."

இந்த அடிப்படையின் மீதுதான், இந்த நாட்டின் சமுதாயம் அமைக்கப்பட்டு இருக்கிறது என்பதை எவராலும் மறுக்கமுடியாது. ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக இந்தக் கேடு பயக்கும் கருத்துக்கள், நமது மக்களிடம் பரப்பப்பட்டு வந்திருக்கின்றன. நமது மக்களின் மனமும் இத்தீய கருத்துக்களில் அமிழ்ந்துபோய் இருக்கிறது.

இதனால், ஒவ்வொரு தனி நபர்களுக்கும் இருக்கவேண்டிய பொறுப்பும், கடமை உணர்ச்சியும், தன் முயற்சியில் நம்பிக்கையும், பழுதுபட்டுப்போயிருக்கிறது. இன்றில்லையானாலும் என்றாவது ஒரு நாள், இந்தச் சமுதாயம் நன்னிலை பெறும் என்றுகூட நம்பிக்கைகொள்ள முடியாத அளவிற்கு, இந்த நாசக்கோட்பாடு, மக்களை இறுக்கிப்பிடித்துக் கொண்டிருக்கிறது. இந்த மூல கோளை — அறிவியல் தேக்கத்தைத் தகர்த்தெறிய, முதற் பணியாகக் கொண்டால் அன்றி, இந்தச் சமுதாயம் என்றென்றும் உருப்படப் போவதில்லை. இந்த நாட்டு மக்களும் என்றென்றும் புத்துலக வாழ்வை அனுபவிக்கப் போவதில்லை!

"உடல் அழியக் கூடியது! அதனை வளர்ப்பது வீண் வேலை! உலக சுகத்தை ஏறெடுத்தும் பார்க்காதே! உன்னை நீ உணர்ந்து கொள்ள முயற்சி எடு! உணவை வெறுத்தொதுக்கு! உடையை உதறித்தள்ளு! உறையுளைத் துறந்து வெளியேறு! காதலைக் கடுவிஷமெனக்கொள்ளு! காதல் மக்களைக் கனவிலும் கருதாதே! கட்டை கடைத்தேறக் கடவுளை நாடு!" என்ற உபதேசத்தில், உபதேசமா இது — உள்ளத்தை உருக்குலைக்கும் சிலந்தி வலையில், ஈக்கள்போல் சிக்கிச் சீர்குலைந்து கிடக்கும் மக்களைப் பார்த்து, "உடலைப் பேணு. சத்துள்ள ஆகாரத்தைநாடு. உடலாரழியின் உயிராரழிவர். நோய்க்கு இடங் கொடேல. கந்தையானாலும் கசக்கிக் கட்டு. கூழானாலும்

[தொடர்ச்சி 4-ம் பக்கம் பார்க்க]

Phone No. 4502 Regd. No. M. 54

மாலை மணி

ஆசிரியர்: C.N. அண்ணாதுரை M.A. MALAI MANI

(திராவிடர் தமிழ்த் தினசரி - கருத்திதழ்)

மலர் 1] சென்னை (17—9—49) வெளியூர் (18—9—49) [இதழ் 3

தென் ஆபிரிக்கா கற்பிக்கும் பாட

ஆணவப்போக்கு அடியற்று வீழ்வது உறுதி!

தென் ஆபிரிக்காவில் வெள்ளைக் காரருக்கும் ஆபிரிக்கச் சுதேசிகளுக்கு மிடையே இறுதியாகப் பகிரங்கப் போர் ஏற்படக் கூடுமென்றும், அங்குள்ள அரசியல் நிலைமை காட்டுகிறதெனக் குடியேற்ற நாட்டு நிர்வாகம் பற்றிய பிரிட்டிஷ் நிபுணர் ஹெய்லி பிரபு கூறினார். இவ்வண்ணம் போர் நடந்தால் வியப்புறக் கூடிய தொன்றுமில்லை. ஏனெனில், தென்னாப்பிரிக்காவில் அண்டிப்பிழைக்க வந்த வெள்ளையர் அகம்பாவம் பிடித்து, நிற வெறி கொண்டு, ஆணவம் பிடித்தலைகின்றனர். கரு நிற மக்களை அடிமைகளிலும் கேவலமாக மதிக்கின்றனர், ஆனால் அக் கறுப்பர்களின் நாட்டில் வந்தமர்ந்து கொண்டு சுரண்டித் தின்று சுகபோகமனுபவிப்பதில் பின் வாங்குவதில்லை எனவே, தென்னாப்பிரிக்க மக்கள் எவ்வளவு நாள் வரையில் இந்த வெள்ளை நிற மக்களின் கொடுமையைப் பொறுப்பர்! ஆத்திரம் பொங்கினால் ஒரு நாள் போர் கிளம்புவது இயற்கையே அல்லவா?

ஆனால் அந்த நிலைமை இந்தியாவுக்கு ஒரு படிப்பினை கற்பிக்க வல்லதாயிருக்கிறது. தென் ஆபிரிக்காவிலிருப்பதை விடக் கொடிய சாதி வெறி இந்தியாவில் நடமாடுகிறது. சுமார் 6 கோடி மக்களைக் கொண்ட ஒரு பெரிய இனத்தைத் தீண்டப் படாதவர் என ஒதுக்கி வைத்து, அடிமைகளினும் கேவலமாக நட... வாழும் ஆணவத்திமிர் பிடி... அகம்பாவிகள் இந்தியாவி... இருக்கின்றனர். இந்த அ... பாவிகளுக்குத் தென் ஆபிரி... நிலை ஓர் எச்சரிக்கையாக அ... யும் என்று நம்புகிறோம். தென்னாப்பிரிக்கா கற்பிக்கு... பாடத்தை உணர்ந்து மு... எச்சரிக்கையுடன் இந்திய ... வெறியர்கள் தங்களைத் தி... திக் கொள்ளமுன் வராவிடி... திருத்தி வைக்கப்பட வே... டிய நிலைக்காளாகக் கூடும்.

இந்தியைத் தமிழர்கள் ஏற்றனரா?

ஆதாரம் ஏது?

"அரசாங்க மொழி இந்திதான் என்பதைத்தென் இந்தியாவிலுள்ள பெருவாரியான மக்கள் ஏற்றுக் கொண்டு விட்டார்கள். இந்தியைத் தென்னிந்தியர்கள் ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும்." என்று அ. இ. சபைத்தலைவர் பாபு இராஜேந்திர பிரசாத் அ. இ. சபையில் மகிழ்ச்சி பொங்கப் பேசியுள்ளார்.

அ. இ. சபையில், திரு. சுப்பராயன், திரு. இராமலிங்கம் செட்டியார் போன்றவர்கள் மொழிப் பிரச்சினை குறித்துப் பேசுகையில், தமிழர்களின் மனப்பான்மை என்ன வென்பதை நன்கு எடுத்துக் காட்டினார்கள். திரு. சுப்பராயன் தம் வீரப்பிரதாபத்தை எடுத்து விளக்கு முகத்தான் இந்தியை எதிர்த்துத் தமிழர்கள் நடத்திய பெரும் போராட்டத்தையும் அதற்காகப் பல தமிழர்கள் சிறை புகுந்ததையும் கூறியுள்ளார்.

இவ்வளவையும் கேட்டுக்கொண்டிருந்த பாபு இராஜேந்திரர்தான், பெருவாரியானதென் இந்தியர் இந்தியை ஒப்புக் கொண்டனர் என்று கூறினர்.

இந்தி அரசாங்க மொழியானால் மடமையாகு...

லும் சரி, தெய்வ மொழியானாலும் சரி, தமிழ் நாட்டில், சமஸ்கிருதத்தைப் போற்றி வாழும் சிறுகூட்டத்தாரைத் தவிர மற்றெவரும் விரும்பி ஏற்கமாட்டார்கள். அரசாங்க மொழியாக இந்தி இந்நாட்டின் மீது திணிக்கப்பட்டால், வயிற்றுப் பிழைப்பை நாடி, ஆங்கிலம் பயின்றது போல், இன்னும் இருநூறு ஆண்டுகளுக்குள் 100-க்கு 6 பேர் வீதம் இந்தியைப் பயின்று கொண்டு சுரண்டிச் செல்லும் வடநாட்டு ஏகாதிபத்தியத்துக்குத் துணை போகிறவர்களாக வீற்றிருப்பர். இதுதான் நடைபெறலாமே ஒழிய, இந்தியைப் பெருவாரியான தமிழர்கள் விரும்பிப் படித்துவிட மாட்டார்கள். அப்படி விரும்பிப் படிப்பதற்கு ஏற்ற மொழியாகவும் அச்சந்தை மொழி அமைந்திருக்கவில்லை.

அப்படியிருக்கும் பாபு இராஜேந்திரர் தென்னாட்டவர் பெரும்பாலோர் ஏற்றதாகக் கூறியிருப்பது காங்கிரஸ் மரபு நோக்கி வந்த வழக்கமே தவிர, உண்மையில், மனமார அவர் இவ்வாறு நம்பிக் கூறியிருக்க

மந்திரி சபையில் 'குதிரைப்பந்தய...

குதிரைப் பந்தயங்களை பொ... டிப் பணத்தைப் பந்தயங்கட்டு... வழக்கத்தை 1950 ஏப்ரல் 1-... தேதி முதல் நிறுத்திவிட வேண்... மென்று சென்னை அரசாங்கம் 19... ஏப்ரல் 22-ந்தேதி உத்தரவிட்டிரு... ந்தது. ஆனால், இந்தியாவின் மு... லமைச்சருடைய கருத்து, குதிரை... பந்தயங்களை நிறுத்தும்விஷயத்தி... வேறாக இருப்பதால், பெரிய ... மான் கருத்திற்கு எதிராகப் போ... முடியாத சென்னை மந்திரி சபை... யில் இந்தக் குதிரைப் பந்தயம் மீ... டும் ஆலோசனைக்கு வரலா... என்று கருதப்படுகிறது. இ... ஆண்டு குதிரைப்பந்தயம் கடை... குதிரைப் பந்தயமாக இருக்கும... அல்லது தொடர்ந்தே குதிரை... பந்தயங்கள் வழக்கப்படி ந... பெற்று வருமா என்பது சென்... மந்திரி சபையைப் பொறுத்தவிஷ... மாகும். மந்திரி சபையின் முடிவு... குப்பிறகு, காங்கிரஸ்சபையின் மு... வுக்கு வந்து முற்றுப் பெறுமெ... றும் இவ்விரண்டு சபைகளும் இந்... யாவின் முதலமைச்சர் கருத்து... குத் ததாஸ்து பாடுவதைத் தவி... வேறென்ன செய்யப்போகின்றன...

ஏஜெண்டு தோழர்களுக்கு முக்கிய அறிவிப்பு

6 பக்கங்களுடன் வெளிவரு... 'மாலை மணி' இதழ்களை பி... ஒன்று (0—1—0) ஒரு அ... வீதம் விற்கவேண்டும் என்பதை... தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

மானேஜர்

மாலை மணி

லை 17—9—49 சனிக்கிழமை

வெறியாட்டம்

இடத்தைக கொடுத்தால் .தைதயும் சேர்த்து பிடுங்கு ர்கள்' என்றபழமொழிக்கு ணங்க, வடநாட்டு இந்தி றியர்கள், தங்கள் வெறி ணர்ச்சியை, வேண்டிய இட ல்லாம், வேண்டியவாறெல் ம் பாய்ச்சுவதற்குத் தலைப் டுவிட்டார்கள். அந்த யற்சியிலே வெற்றியும் றறு வருகிறார்கள். அவர் சென்ற இடமெல்லாம் வர்களுக்கு வெற்றி! இங் பா-அது சிக்குண்டிருக்கும் ங்கிரஸ்-எல்லாம் அவர்கள் கக்குள் அடங்கிவிட்டன. னையோர், அவர்கள் முன்னி யில் கோழைகளாக ஆகி ட்டார்கள். ஏனோதானோ தரியவில்லை!

மொழிப் பிரச்சினையிலே, வர்களின் வெறியுணர்ச்சி வற்றி கொண்டு விட்டது. ந்திய துணைக்கண்டத்தில ந்தி பேசுவோர் 8 கோடி. னைய மொழி பேசுவோர் 2ட காடி. என்றாலும் அவர்கள் வன்றுவிட்டார்கள். இந்திய ரசியலின் உயிர்நாடி, அவர் ள கையிலே சிக்கியுள்ளது. னவே அவர்கள் ஆட்டிப் டைக்கிறார்கள்; ஏனையோர் அவர்கள் சொற்களுக்கு ஆடு றார்கள்!

உருதுவுக்கும்— இந்திக்கும் டைநிலை மொழியாக விளங் ம 'ஹிந்துஸ்தானி,' இந்திய ணைக்கண்டத்தின் பொது மொழியாக ஆக வேண்டும ன்று காந்தியார் கூறினார்; அந்தக் கருத்து இந்தி ஆதர ாளர்களால் இன்று மிதித் துத் துவைக்கப்பட்டு விட் டது!

காந்தியாரின் மொழிப்படி ஹிந்துஸ்தானி'யே இந்திய அரசியல் மொழியாக ஆகவேண்டும் என்று, அகில இந்தியக் காங்கிரஸ மாநாடு தீர்மானித்தது. அந்தத் தீர் மானம் தூக்கி எறியப்பட்டு விட்டது அவர்களால்!

ஹிந்துஸ்தானியே அர சியல் மொழியாகவேண்டும், சமஸ்கிருதமயமான இந்தி கூடாது என்று ஜெய்பூர் காங் கிரஸிலும், வேறு பல இடங் களிலும துள்ளிக் குதித்து வீரவுரை ஆற்றினர் பண்டித நேரு. அவருடைய சொற்கள் காற்றில பறக்கவிடப்பட்டு விட்டன இப்பொழுது!

இந்தி ஏகாதிபதயம் ஏற் படுவது கூடாது—பொருந் தாது என்று வடநாட்டுப் பேராசிரியர்கள் பலரும் கூறி னார்கள். அவர்கள் கூற்றுக் கள்ெலலாம் தவிடு பொடி யாககப்பட்டுவிட்டன இந்தி ஆதரவாளர்களால்!

காந்தியார்- காங்கிரஸ்— நேரு- வடநாட்டுப் பேராசிரி யர்கள் ஆகிய இவர்கள் மொழிகளையே, துச்சமெனக் கருதும் வெறிப்போக்கு இந்தி மொழி பேசுவோர்களிடத்தில் இருக்கிறது என்றால், தென் னாட்டவரைப் பற்றியும்,தென னாட்டு மொழியைப்பற்றியும் அவர்கள் என்ன நினைப்பார் கள்? எலியாக,முயலாக நினைப் பதல்லாமல் புல்லளவு மதிப் பேனும் தருகிறார்களா - தரு வார்களா?

இந்தி-வெறியுணர்ச்சி மொழியளவில்மட்டும் அல் லாமல, எண்கள் அளவிலும் போய்நின்றது தங்களது இந்தி எண்களே புகுத்தப்படவேண் டும் என்று தலைவிரித்தாடினர். இப்பொழுது அகில உலக எண்களை ஏற்றுக்கொண்டா லும், நாளடைவில் இந்தி எண்களையே கொண்டுவந்து விடமுடியும் என்ற தைரியத திலே, இப்பொழுது எண் பிரச்சினையைப் பொறுத்து, அவர்களிலே பெரும்பாலோர் வந்து நிற்கின்றனர்.

அகிலஉலக எண்களையே ஏற் றுக்கொள்ள வேண்டும் என்ற தீர்மானத்திற்குக் காங்கிரஸ் உறுப்பினர்கள் அனைவரும ஆதரவு தரவேண்டும் என்று அ. நி. சபைக்காங்கிரஸ் கட்சி உத்தரவு இட்டுவிட்டதாம்! அது பொறுகக முடிய வில்லை யாம் தோழர் புருஷோத்தம தாஸ் தாண்டனால்! மொழி யைப் பொறுத்துக்கூட அல்ல, வெறும் எண்களைப் பொறுத்துத்தான்! தம் தாய்மொழி எண்களைத் தவிர்த்து, வேறு எண்களை ஏற்றுக கொள்வதில், தாண்ட னுக்குப் பொறுக்க முடியாத வேதனை யுண்டாகிறது! தாண டன் இந்தி ஆதரவாளர்களின் முன்னணி வீரர்— அவர் ஓர் எடுத்துக்காட்டு!

நாம் இங்கே குறிப்பிட விரும்புவது, இந்தியாவின் பொது மொழி ஹிந்தியா— ஹிந்துஸ்தானியா — வேறு மொழியா என்பன பற்றிக கூட அல்ல, அல்லது ஹிந்தி எண்களா—அரபி எண்களா என்பவைபற்றிக்கூட அல்ல, இந்தி ஆதரவாளர்களுக்கு இருக்கும் வெறியுணர்ச்சியைத் தான்! சொந்த மொழியிடத் திலும்-சொந்த மொழி எண் களிடத்திலும், அவர்களுக்கு அவ்வளவு பற்று — வெறி யுணர்ச்சி தரும் அளவுக்குப் பற்று — இருக்குமேயானால், மற்ற மொழியாளர்களுக்கு— குறிப்பாகத் தமிழ் மொழி யாளர்களுக்கு அந்த அளவு பற்று இருக்காதா? இருக்கக் கூடாதா? இருக்க முடியாது என்று எண்ணுகிறார்களா? அவர்கள் உணர்ச்சியைக் கண்ட பிறகும் ஏற்படாது என்று நினைக்கிறார்களா?

இதோ தாண்டன் தன் உணர்ச்சியை எப்படிக் காட்டு கிறார் என்றுபாருங்கள், அரபி எண்களையே காங்கிரஸ் அ. நி. சபை உறுப்பினர்கள் ஆதரிக்க வேண்டுமென்று கட்சிக் கூட் டம் சொல்லியது, பொறுக்க மாட்டாமல், தன்னுடைய அ. நி. சபைக் கட்சி உறுப்பி னர் பதவியிலிருந்து ராஜி னாமா செய்துவிட்டாராம்!எப படி அவர் தாய்மொழிப் பற்று! வெறியுணர்ச்சி எப்படிக் கலந் திருக்கிறது காணுங்கள்! அத் தகையோர் ஆதிக்கத்தின்கீழ் தான், இன்று திராவிடம் அடைக்கலப் பொருளாக ஒப் படைக்கப்பட்டிருக்கிறது அர சியல் கோழை உள்ளத்தின ரால்!

தமிழை இந்திக்கு அடகு வைத்துவிட்டுத் திரும்பியுள்ள தமிழகத்து உறுப்பினர்களே! தாண்டனின் தாய்மொழிப் பற்றைப் பாருங்கள்! உங்கள் பற்று எங்கே! தாண்டவமா டும் தாண்டனைக் கண்டபிற கும் வெறியுணர்ச்சி எழும்ப வேண்டாம், உண்மை உள் ளுணர்ச்சியாவது எழவேண் டாமா? தாண்டன் போன்றா ரின் வெறியுணர்ச்சி கண்டு உங்கள் உள்ளம் பதற வில்லையா?

ஆம! உங்களுக்குப் பதற் றம் ஏற்படவில்லை! ஆனல், உருது பேசும அன்பர் ஒருவர் உணமையிலேயே பதறிப் போயிருககிறார். ஹிந்துஸ் தானியை நீககிவிட்டு ஹிந்தி யைப் புகுத்தியதறகாகவும், உருது லிபியை அறவே புறக் கணிததுவிட்டு, தேவனாகரி லிபியை நுழைத்ததற்காக வும், தன்மான உணர்ச் சியால் தாக்கப்பட்ட தோழர் Z. H. லாரி தம் அர சியல் நிர்ணய சபை உறுப் பினர் பதவியையே ராஜினமா செய்து விட்டிருக்கிறார். ஆதிக் கங் கொண்டோரின் எதேச் சதிகாரப்போக்கை வெளி யுலகிற்கு எடுத்துக் காட்ட வும், தம் சொந்த, மான உணர்ச்சியைக் காப்பாற்றிக் கொள்ளவும் தக்கதொரு செயலைச் செய்து காட்டியிருக் கிறார். அவரைககண்ட பிறகா வது தென்னாட்டு உறுப்பினர் களுக்கு மான உணர்ச்சி ஏற் பட்டிருக்க வேண்டாமா?

வெறியுணர்ச்சியால் தூண் டப்பட்ட தோழர் தாண் டன் காங்கிரஸ் அ. நி, சபை உறுப்பினர் பதவியை ராஜி னமா செய்தார்! தோழர் லாரியோவெனில், தனமான உணர்ச்சியால் தூண்டப்பட்டு அ. நி சபை உறுப்பினர் பதவி யையே ராஜினமா செய்து விட்டிருக்கிறார்! இந்த எடுத் துக்காட்டுகள்கூட, வட நாட்டவரினின்றும் எவ்வகை யிலும் வேறுபட்டு விளங்கும் தென்னாட்டு உறுப்பினர் களுக்கு மானம்—சூடு— சொரணை-ரோஷ உணர்ச்சி களைக் கொடுக்கவில்லை யென் றால், இவர்களைப்பற்றி என்ன கருதுவது? சிந்தனை ஏதும அற்ற சோற்றாலடித்த பிண் டங்களாக ஆகிவிட்டார்களா? அல்லது மரமண்டையினராய் மாறிவிட்டார்களா?

இந்தி வெறியர்களின் வெறி யுணர்ச்சி வளர்ந்தோக்கிக் கொழுந்து விட்டு எரிகிறது. சொந்த மொழிப்பற்று-நாட் டுப்பற்று அவர்கள் கொள் வதிலே நமக்குத் தகராறில்லை. அந்தப்பற்று, நம்முடைய மொழிப் பற்றையும், நாட்டுப் பற்றையும் புறக்கணித்துச் சீர் குலைக்கும் வெறியுணர்ச்சியாக இருக்கக்கூடாது என்பது தான். என்றாலும் அவர்கள் வெறியுணர்ச்சித் தணியவில்லை —மாறாக பீறிட்டுக்கொணடே செல்லுகிறது தங்கள் மொழி, கலாசாரம,பண்பாடு,நாகரிகம் ஆகிய அனைத்தையும் வலுக் கட்டாயமாக மற்றப் பகுதி களில் புகுத்தும் அளவுக்கு, வெறியுணர்ச்சி பீறிட்டெழு கிறது.

ஏ! தாழ்ந்த திராவிடமே! உன் மொழி, கலை, நாகரிகம், பண்பாடு, பெயர், புகழ்எல்லா வற்றையும் பறி கொடுத்து விட்டுப் பிறநாட்டுக்குக் குற்றேவல் புரிந்து, குனிந்து வாழப்போகிறாயா? அல்லது கோழைத்தனத்தை உதிர்த் துக் குருதியோட்டம் துடிக்க, எஃகு உள்ளங்கொண்டு, தன் னிலை காத்துத் தரணியாண்டு பரணிப் பாடப் போகிறாயா? எதைச் செய்ய விரும்புகிறாய்? எதை? எதை?? எதை???

ஆதாரக் கல்வி போதனை முறைப்பள்ளி
அரசாங்கத் 'தொண்டர் படை முகாமாகிறது'

ஒன்றரை லட்சம் ரூபாய் செல வில் ஸ்ரீவில்லியுத்தூர் தாலுக் காவைச் சேர்ந்த மல்லி பிர்க்கா வில் சுமார் 25 ஏக்கர் நிலப் பரப் பில், அரசாங்கம் ஆதாரக் கல்வி போதனை முறைப்பள்ளி ஒன் றைக் கட்டி சென்னைமுதலமைச் சர் அதனை அண்மையில்திறந்து வைத்தார்.

இப்பள்ளியில் பயிற்சி பெற வரும் ஆசிரியர்கள், கிராமப் பிர சாரம் செய்யவேண்டும்; கிராமத் தொண்டுக்காகத் தங்களை அர்ப் பணம் செய்து கொள்ள வேண் டும்; கிராமங்களில் சாப்பாடு வசதி இல்லாததின் சமை யலும் கற்றுக் கொள்ள வேண் டும்; முதியோர் கல்வியைப் பரப்ப வேண்டும்; பத்திரிகைச் செய்திகளைப் பரப்ப வேண்டும் என்றெல்லாம் முதலமைச்சர் அப் பள்ளியில் பயிற்சி பெற வரும் ஆசிரியர்களுக்கு அறிவு றுத்தினர்.

விஷயம் அதனுடன் நின்று விடவில்லை. அங்குப் பயிற்சி பெறும்ஆசிரியர்கள், அரசாங்கம் செய்யும் நன்மைகளைமக்களுக்கு எடுத்து விளக்கும் தொண்டினை யும் செய்ய வேண்டு மென்று முதலமைச்சர் கூறுகிறார். அர சாங்கம் செய்யும் நன்மைகளை விளக்கிக் கொண்டிருக்க, இவ் வளவு பெரும் செலவில் ஆசிரி யர்கள் எனும் பெயரில் இத் தகைய தொண்டர் படை அமைப்பு ஏன்? இவர்கள் தங் கள் வயிற்றுக்குச் சோறு சமைத் துத் தின்று கொண்டு முதியோர் கல்வி, இளைஞர் கல்வி, தொழிற் கல்வி முதலியவற்றையும் கற் பித்துக் கொண்டு, அரசாங்கத் தி[illegible]கான பிரசாரகர்களாகவும் இருக்க வேண்டு மென்றால், எந் தக் காரியமாவது இவர்களால் சரிவரச் செய்து முடிக்க முடியு மா? ஆகவே, இவர்கள் அரசாங் கப் பிரசாரகர்களாகப் பயன் படு வதைத் தவிர வேறு நல்ல காரி யங்களுக்குப் பயன்பட முடியா தாகையால, இந்த முயற்சியும் இதற்காகும் செலவும் கருதிய பலனைத் தருவதாக அமையுமோ! என ஐயுற வேண்டி யுளது.

இந்தி கும்மாள மடிக்கிறது

தேவநாகரி லிபிஇந்தி, 15 ஆண்டு களுக்குப் பிறகு நாட்டின் பொது மொழி ஆவதென்று அ. நி. சபை யில் முடிவு செய்யப்பட்டு விட்டது. அ. நி. சபை அமைப்பு நிலையைக் காணும் எவரும் இத்தகைய முடிவு தான் ஏற்படும என்பதை முன்னரே எதிர்பார்த்தவர் களாதலின், எவ ரும் வியப்படையப்போவதில்லை.

ஆனல் 15 ஆண்டுகளுக்குப் பிறகு பொது மொழியாக வேண்டிய இந்தி, இப்போதே அரசாங்க இலாக் காவில் கூத்தாடத் தொடங்கிவிட் டிருக்கிறது.

இந்திய அரசாங்க பூதத்துவ இலாக்காவின் தென்பகுதிஅதிகாரி திரு. எ. ஜி. ஜிங்கரன் என்பார் தம இலாக்காவில் எல்லாவற்றை யும் இந்துஸ்தானியில் நடத்தத் துவக்கிவிட்டார்.

அ. நி- சபை முடிவு செய்தது இந்தி—15 ஆண்டுகளுக்குப் பின் என்று.

தோழர் ஜிங்கரன் இன்றே துவக்கிவிட்டார் தம் இந்துஸ் தானியை.இதுதான் வடநாட்டவர் களின் மனப்பண்பை நன்கு விளக் கும் சாதனமாயிருக்கின்றது. எவ்வாறேனும் இந்தியை விரைவில் பரப்பித் தமிழ் நாட்டில் இந்தி ஏகாதிபத்தியத்தை நிலைநாட்டிவிட வேண்டுமென்பதே வடநாட்டவர் களின் பேரவாவாகும். வெள்ளையர் களுக்கு இந்நாட்டில் ஆள் கிடைத் ததுபோல், இந்திக்கும் இந்நாட்டில் ஆள்கிடைத்துக்கொண்டிருக்கிறது. இவ்வாட்களை வைத்துக்கொண்டு வடநாட்டு இந்தி, அ. நி. சபை முடி வையோ, மற்றெவர் முடிவையோ, எதிர்பாராமல் மிக விரைவாக இந் நாட்டில் புகுந்துசர்வாதிக்கம் பெற முனைந்துவிட்டிருக்கிறது. என்ன கொடுமை!

"ஆசிரியர் பிள்ளை அறிவீனன்"

நம் நாட்டிலே "ஆசிரியர் மகன் அறிவீனன்" என்றொரு பழமொழி இடைக்காலத்திலே தோன்றியது. பள்ளி ஆசிரியர்களாக வேலைசெய்ய வருபவர்கள் பெரும்பாலோர் குறைந்த வருவாயுடையவர்கள். கல்லூரிப் பேராசிரியர்கள் தவிர, மற்றைப் பள்ளி ஆசிரியர்களின் சம் பள நிலை பரிதபிக்கத்தகுந்தது. இதற்காகவென்று, பள்ளி ஆசிரி யர்களுக்கு வீட்டு வாடகை அல வன்ஸ், அவர்களுடைய பிள்ளை களுக்கு இலவசக்கல்வி முதலியவை அளிக்கப்படவேண்டும் என்று சைதாப்பேட்டையில் நடந்த செங் கற்பட்டு மாவட்ட துவக்கப்பள்ளி ஆசிரியர்மா நாட்டில் கோரியபோது, கல்வி அமைச்சர் திரு. மாதவமே னன் அளித்த பதில்விந்தையானது.

அதாவது, ஆசிரியர்கள் தங்கள் நிலை பற்றிக் கருதாமல் பிள்ளைகளுக் கும் சமுதாயத்துக்கும் தங்கள் கட மையை ஆற்ற வேண்டுமென்றும், மாகாணச் செல்வ நிலையைக் கவ னிக்கவேண்டுமென்றும், ஆசிரியர் களின் பிள்ளைகளுக்கு இலவசக் கல்விதர என்ன அவசியம் நேர்ந்த தென்பது தமக்குத தெரியவில்லை யென்றும் அமைச்சர் கூறினார்.

அமைச்சருக்குத்தெரியுமா?ஆசிரி யர்களின் அல்லல். கிடைக்கும் வரு வாய், உணவுக்கே போதாமையால் தங்கள் பிள்ளைகளைப் படிக்கவைக்க முடியாமல் "ஆசிரியர் பிள்ளை அறி வீனன்" என்ற சொற்றொடரை உறுதிப்படுத்தும் நிலையில் ஆசிரியர் கள் வாழ்வதை உல்லாசபுரிஅமைச் சர் எப்படி உணர முடியும்! வாழ வழியில்லை என்று கதறும் ஆசிரியா களுக்குப் பொறுப்பான பதிலளிக் கத்தான் இவர்களுக்கு எப்படி முடி யும்? கல்வி பரவவேண்டும் என்று மேடைகளில் பேசிக்கொண்டே யிருந்தால் மட்டும் போதாதா?

மக்களை மடமையில் வீழ்த்துவதா?

கற்பனைக் கதைகளைப் பரப்பும் கருத்தற்ற பத்திரிகைகள்

ராமநாமத்தை உச்சரித்துக்கொண்டே உப்பலப்பாடு கிராமத்தைச் சேர்ந்த பட்டுராஜு என்ற 30 வயதுக் குருட்டுப் பையன், கோதாவிரி ஆற்றில் முழுக்குப் போட்டதின் பயனாக உடனே கண் பார்வை பெற்றுவிட்டானாம். அதே பையன் முன் ஊமையாகவும் இருந்தானாம். அவன் கனவில் ஓர் உருவம் தோன்றி ஊமைத்தனம் 3 நாட்களில் நீங்கிவிடும் என்று கூறி மறைய, அவனுடைய ஊமைத்தனம் அதேபோன்று மூன்று நாட்களில் மறைந்து விட்டதாகவும் கூறப்படுகிறது.

இவ்வாறு பத்திரிகைகளில் பரப்பப்படும் கதைகள் பல. அப்போதைக்கப்போது, திடீர் திடீரென்று இத்தகைய கதைகள் கிளம்புவதுண்டு.

கடந்த ஜென்ம வாழ்க்கையைக் கூறும் பெண் குழந்தைகள், ஆண் குழந்தைகள் தோன்றுவதுமுண்டு. இக்குழந்தைகள் முன் ஜென்மத்தைப்பற்றிக் கூறும் வரலாறுகளைச் சரிபார்க்கும் பேர்வழிகள் தோன்றிச் சரிபார்த்ததாகவும் செய்திகள் வரும்.

இவ்வாறெல்லாம், நாட்டுமக்களை இன்னும் மூடத்தனத்தில் மூழ்த்தும் வேலையை ஒரு சிலர் செய்துவர, அவற்றைப் பத்திரிகைக்காரர்கள்-முற்போக்குள்ளவர்கள் என்று கருதப்படுபவர்கள்- கொட்டை எழுத்துக்களில் வெளியிட்டு வருவதென்றால், நம் நாட்டின் இந்நிலைகண்டு வருந்துவதா? வியப்படைவதா?

கோதாவிரி ஆற்றில் ராமநாமத்துடன் மூழ்கியமாத்திரத்தில் கண் பார்வை கிடைக்குமென்றால், எத்தனையோ குருடர்கள் அல்லும் பகலாக ஆண்டவனை எண்ணி எண்ணித் தங்களுக்கேற்பட்ட தீராக் கொடுமையைக் கருதி வருந்துகிறவர்கள், எங்ஙனமேனும் ஓடோடிச் சென்று கோதாவிரியில் ஒன்றுக்கு ஆயிரமாக முழுக்குப்போடுவார்களே!

குருட்டுத்தனம் நீங்க இவ்வளவு எளிதில் மருந்திருக்கிறதென்றால், நாட்டிலே கண் ஆஸ்பத்திரிகள், கண் வைத்தியர்கள், குருடர் பள்ளிகள், குருடர்களுக்கு உதவி செய்யும் ஸ்தாபனங்கள் ஆகிய இவற்றிற்கெல்லாம் இங்குஎன்ன வேலையிருக்கிறதென்று கேட்கிறோம். ஏன் இந்த ஸ்தாபனங்கள் இருக்கவேண்டும்? குருடர்களைக் கோதாவிரி ஆற்றுக்கு அழைத்துச் செல்ல ஆட்களை அமர்த்திவிட்டால் போதுமே! முக்கிய காரியங்களுக்குப் பணமில்லாமல் அவதிப்பட்டுக்கொண்டிருக்கும் அரசாங்கம் இந்த "நல்ல" முறையைப் பின்பற்றுமா?

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் அறிஞர் அப்பாதுரை!

சென்ற 5-9-49 செவ்வாய்க்கிழமை மாலை 5-30 மணிக்கு அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் அறிஞர் Dr. அ. சிதம்பரநாதஞ் செட்டியார் M.A. Ph.D. அவர்களின் தலைமையில் பன்மொழிப் புலவர், க. அப்பாதுரை M.A.L.T. அவர்கள் 'சமூக இலக்கிய மாண்பு' என்ற பொருள் பற்றிச் சொற்பொழிவாற்றினார்கள். கூட்டத்திற்குச் சுமார் முந்நூறு மாணவர்கள் வந்திருந்தனர். பின்னர் செயலாளர் சோ. அருணகிரி நன்றி கூறக் கூட்டம் இனிது முடிந்தது என்று செயலாளர் அருணகிரி எழுதுகிறார்.

கடல் கடந்த நாட்டில் தமிழர்கள் சொத்து

பர்மாவில் செட்டிக் கோட்டையினர்க்குச் சொந்தமான நிலங்கள் 30 லட்சம் ஏக்கர்களிருப்பதாகவும், அவை 90 கோடி ரூபாய் மதிப்புடையவைகளென்றும் தெரிகிறது.

இவ்வளவு சொத்துக்களையும் நாட்டுக் கோட்டையர் அப்படியே அனுபவித்துக் கொண்டு அந்நாட்டிலேயே இருப்பதென்பது இனி இயலாக் காரியம். ஆகவே, அந்தச் சொத்துக்களை நல்ல முறையில் இந்தியாவுக்கு, பணமாக்கிக் கொணர இந்திய அரசாங்கம் முன்வர வேண்டும். நாட்டுக் கோட்டையினரும் இனியேனும் பிறநாடுகளில் தங்கள் மூலதனங்களைப் போட்டு, அங்குள்ள மக்களைச் சுரண்டிப் பொருளீட்டும் எண்ணத்தைக் கைவிட்டு, அச் சொத்துக்களைப் பெற்றுத் தமிழ் நாட்டில் பல புதிய தொழிற்சாலைகளை ஏற்படுத்துவதில் மூலதனமாகப் போடுவார்களாயின் நாட்டுக்கும் நலம்; தங்களுக்கும் பலன் விளைத்துக் கொண்டவர்களாவர்.

வெளிவந்துவிட்டது

திருக்குறள்—குழந்தையுரை

"இராவணகாவியம்" ஆசிரியரின் ஆராய்ச்சிமிக்க விரிவுரை! எளிய நடை!

540 பக்கம். அழகிய அட்டை விலை ரூ4-0-0.

மொத்தமாக வாங்குவோர்க்குத் தக்க கழிவுண்டு.
முன்பணம் அனுப்புவோர்க்கு அஞ்சல் கூலி இனாம்.

தேவைக்கு:- சிவலிங்கவிலாசம் புத்தகசாலை, ஈரோடு.

குறிப்பு:— 'மாலை மணி' ஏஜண்டுகளிடமும் கிடைக்கும்.

மக்களாட்சியும், அதை நாம் காணுமிடமும்

அண்ணாமலை நகர், செப். 14.— சரித்திர அரசியல் கழகத்தின் (History and Politics Society) சார்பில், 13—9—49 மாலை 5-30 மணிக்கு ஓர் சிறப்புக்கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்திற்கு மேற்படி கழக மாணவத்தலைவர் தோழர் S. ரகுபதி தலைமை வகித்தார். அவ்வமயம், "மக்களாட்சியும், அதை நாம் காணுமிடமும் என்ற தலைப்பில் ஆங்கிலத்தில் தோழர் M கோவிந்தராசன் பேசுகையில், மக்களாட்சி என்றால், மக்களுக்காக, மக்களால் மக்களிலிருந்து உண்டான ஆட்சியே உண்மை என்றும் அதனுடைய முக்கியமான வேலை, சர்வாதிகாரக் கொடுங்கோன்மை, ஆதிக்க மனப்பான்மை ஆகிய இவைகளற்ற அரசாங்கத்தை உண்டாக்கி, எல்லா மக்களுக்கும் அரசியல் வாழ்க்கையில் பேச்சுசுதந்தரம், எழுத்துச் சுதந்திரம் ஆகியவைகளை அளிப்பதே யாகும் என்று கூறினர்.

மேலும் அவர் அத்தகைய ஆட்சி உலகில் எந்த நாட்டிலும் காணப்படவில்லை என்றும இங்கிலாந்தில் மட்டும் ஓரளவு-அதுவும் அரசியலில் மட்டும்-அத்தகைய ஆட்சி காணப்படுகிறது என்றும் எடுத்துரைத்தார். நம் நாட்டைப்பற்றிப் பேசுகையில் அத்தகைய ஆட்சி காணப்படவில்லை என்றும், 144 செக்ஷனும், புத்தக பறிமுதலும், பேச்சுத்தடையுமே இன்றைய ஆட்சியில் காணப்படுகிறது; இந் நிலை மாறவேண்டும் என்றும, இன்றைய மாணவர்கள் வருங்கால ஆட்சியாளர்களாகையால், மாணவர்கள் அத்தகைய உண்மை மக்களாட்சி ஏற்படப் பாடுபடவேண்டுமென்றும் கூறி முடித்தார்.

தொடர்ந்து தோழர்கள் R. கோதண்டபாணி, அய்யாகண்ணு ஆகியோர் பேசினர்.

இறுதியில் செயலாளர் தோழர் குன்கி-கண்ணன் நன்றி கூறக்கூட்டம் இனிது முடிந்தது. (ந-கி)

மேட்டூர் மில் தொழிலாளர் சங்க ஆண்டு விழா

மேட்டூர், செப். 14— மேட்டூர் தொழிலாளர் சங்கத்தின் 8-வது வருடாந்திர விழா 11-9-49 ல் தோழர் S. R. சுப்பிரமணியம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

ஈரோடு விவசாயிகள் தலைவர் தோழர் ப. வை. கந்தசாமி கொடியை ஏற்றி வைத்துப் பேசினர்.

ஈரோடு தோழர் எம். சின்னசாமி, சேலம் தோழர் எம். அண்ணாமலை, தோழர் எம். சுரேந்திரன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

பம்பாய் மாகாணத்தைப்போன்று $4\frac{1}{2}$ மாத போனஸ் கிடைக்கும்படி செய்ய வேண்டுமென சர்க்காரை வற்புறுத்தியும், மேட்டூரில் வீடுகளைக் காலி செய்யவேண்டுமென்ற சர்க்கார் உத்திரவுக்கெதிராக குடியிருப்போர் செய்யவிருக்கும் சத்தியாக்ரஹத்திற்கு பரிபூரண ஆதரவை வாக்களித்தும், பிராவிடண்ட்பண்டும், கிராஜிவிட்டியும் வீட்டு வசதியும் ஏற்படுத்திக் கொடுக்கும்படி மில் மானேஜ்மெண்டாரை வற்புறுத்தியும், மேட்டூர் முனிசியல் தொழிலாளர் செய்யப்போகும் வேலை நிறுத்தத்திற்கு ஆதரவு தெரிவித்தும், பஞ்சாலைகள் மூடப்பட்டு ஆயிரக்கணக்கான தொழிலாளிகளை வெளியேற்றப்படும் பிரச்சினைக்குப் பரிகாரம்காண்பதற்காக, கட்டுப்பாடுகளை இன்னும் இறுக்குவது, துணி விலையைக் குறைப்பது, மானேஜிங் ஏஜன்சி முறையை ஒழிப்பது, பஞ்சாலைகளின் நிர்வாகத்தை ஒழுங்குபடுத்துவது, மூடப்படும் மில்களை சர்க்காரே ஏற்று நடத்துவது, வெளியேற்றப்படும் தொழிலாளர்களுக்கு நஷ்டஈடு வழங்குவது ஆகிய நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ளும்படி சர்க்காரை வற்புறுத்தியும், தேசத்தில் இடத்திற்கு இடம் மாறுபட்டிருக்கும் பஞ்சாலைத் தொழிலாளிகளின் சம்பள விகிதங்களை ஒழுங்குபடுத்தும்படி சர்க்காரைக் கேட்டுக்கொண்டும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன எனத் துணைக்காரியதரிசி எழுதுகிறார்.

பகுத்தறிவுக் கழகம் திறப்பு விழா

வீரசிகாமணி, செப். 12— 11-9-49 ஞாயிறு மாலை 7 மணிக்கு வீரசிகாமணி ரேஷன் கடையின் முன்புள்ள மைதானத்தில் சங்கரன்கோவில் தோழர் க-தளவாய் அவர்களின் தலைமையில் பகுத்தறிவுக் கழகத் துவக்கவிழா நடைபெற்றது. அவ்வமயம் கடைய நல்லூர் தோழர் தங்கமணி அவர்கள் கழகத்தைத் துவக்கிவைத்துப் பகுத்தறிவு, சுயமரியாதை இயக்கம் இவைகளைப் பற்றி மிகுந்த விளக்கத்துடன் மக்களுக்குப் புரியும் நிலையில் சொற்பொழிவு ஆற்றினார்கள். பின் தோழர் ஆ. திராவிடமணி அவர்கள் சுயமரியாதை இயக்கம், மதம், ஜாதிப் பிரிவினை இவற்றைப் பற்றி நீண்ட நேரம் சொற்பொழி வாற்றினார்கள். பின் தலைவர் அவர்கள் முடிவுரைக்குப் பின் தோழர் அப்பாசாமி அவர்கள் நன்றி கூறக் கூட்டம் முடிந்தது. எனத் தோழர் தளவாய் எழுதுகிறார்.

இனி நடப்பவை

பொள்ளாச்சி— 24-9-49 சனிக்கிழமை இரவு 9-மணி அளவில் திராவிட வாலிபர் கழக செயற்குழு கூட்டம் நடைபெறும். அவ்வமயம், திராவிடர் வாலிபர் கழகத்தின் எதிர்கால வேலைத் திட்டத்தைப் பற்றியும், கோவை மாவட்ட திராவிட வாலிபர் கழக மாநாடு நடத்துவது பற்றியும், மற்றும் திராவிடத்தின் நலங்கருதி அண்ணாவின் முயற்சி வெற்றிபெற ஒத்துழைப்பது பற்றியும் ஆலோசிக்கப்படும். பின்னர் சொற்பொழிவுப்பயிற்சி அளிக்கப்படும் எனச் செயலாளர் தெரிவிக்கிறார்.

திருமணம்

வேலூர், செப். 10— 9-9-49 வெள்ளிக்கிழமை காலை வேலூருக்கடுத்த பள்ள இடையம் பட்டிகிராமத்தில் தோழர் M. கிருஷ்ணனுக்கும் தோழியர் S. சகுந்தலாவுக்கும் தோழர் C. P. சிற்றரசு அவர்கள் தலைமையில் சீர்திருத்தத் திருமணம் நடைபெற்றது. பல தோழர்கள், வாழ்த்திதழ்கள் வாசித்தளித்தனர். வாழ்வின் இன்பம் என்பதைப்பற்றி, தலைவர் சுமார் 2 மணிநேரம் பேசியபின் மணவிழா இனிது முடிந்தது. (ந. கி.)

அதன் நினைவாக ரூ 3-0-0 வரப்பெற்றோம். மகிழ்ச்சி! (ஆ-ர்)

ஆசிரியருக்கு முடங்கல்

தோழரின் விஷமக்கயிறு திரிப்பு

ஐயா!

11-9-49-ந்தேதி வெளியூர் "விடுதலை" 4-ம் பக்கத்தில் "பொய்ச்செய்தி" என்ற தலைப்பு கொண்டுள்ள அறிக்கை தவறானது -விஷமக்கயிறு திரிப்பின் வேலையாகும். கருத்து வேற்றுமை காரணமாக, பெரியகடைத்தெரு திராவிடர் கழகத்தின் செயலாளர்கள் இருவரில் ஒருவர் இவ்விஷம வேலையைச் செய்துள்ளார். எதைப் பொய் என்று கூறுகிறார் அந்த அன்பர்? திருச்சியில் ஜில்லா திராவிடர் கழக உறுப்பினர்கள் கூட்டம் ஒன்று நடந்ததே அதையே பொய் என்கிறாரா? அல்லது அதில் நானும் தோழர்கள் எஸ். காளி வி. புருஷோத்தமன் ஆகிய இருவரும் கலந்துகொண்டது பொய் என்கிறாரா? அல்லது பெரிய கடை வீதி திராவிடர் கழகத்தை நாங்கள் சேர்ந்தவர்கள் என்பதைப் பொய் என்கிறாரா? அவருடைய விஷமச் செய்தியிலே அவ்வளவு தெளிவு (?) அடங்கியிருக்கிறது. குழப்பம் அடைந்திருக்கிறார் பாபம் குழப்பத்தைப் போக்கிக்கொள்ள நல்ல மருந்து இன்னும் அகப்படவில்லை போலிருக்கிறது. அவர் நிலைகண்டு பரிதாபப்பட வேண்டியிருக்கிறது! என்செய்வது! பெரியாரின் திருமணத்திற்கு முன் வரையில் அந்தக்கழக உறுப்பினர்களாக இருந்து பணியாற்றி, இப்பொழுது கழகப் பணிகளிலிருந்து மட்டும் விலகியிருப்பவர்கள் நாங்கள் மூவரும்! பெரியகடை வீதி திராவிடர் கழகத்தின் சார்பாகக் கலந்துகொள்ள எங்களுக்கும உரிமையுண்டு. ஆகவே கலந்துகொண்டோம். அந்த உரிமையை நாங்களாகவேண்டுமானால் உதறித்தள்ளிவிட முடியுமேயல்லாது, அந்த அன்பர் பறித்துவிட முடியாது! பறிக்க நினைக்கிறார் அன்பர். பரிதாபம்!

இப்படிக்கு,
ஆ. அண்ணாமலை,
பெரியகடைவீதி திராவிடர் கழக உறுப்பினன்
59, மணியக்கார தெரு,
திருச்சி, 12—9—49.

விஸ்வேஸ்வரய்யாவின்...

(1-ம பககத தொடர்ச்சி)

குளித்துக் குடி குபபைபுமை தூரக் கொட்டு, மனைபைச் சுத்த மாக வைத்துக் கொள!'' என்று அருமையான - தேவையான - போதனையை, ஊராள்வோர் புரிந்தாலென்ன, பேரறிஞர்கள் பேசித்தீர்த்தாலென்ன, மருத்துவ மணிகள் மூச்சு விடாமல் முணுமுணுத்தால் என்ன, மக்களுக்கான பணிபல புரிவோர் தொண்டை நீர்வரளக் கத்தினால் தான் என்ன, பலன் கிடைக்குமா? பழுதுபட்ட மரம் துளிர்க்குமா? செல்லரித்த மூளை செம்மையுறுமா? ஜீவன் இழந்த சரீரம் சிரித்துப்பேசி எழுந்து நடக்குமா? எதுவும் நிறை வேறாது!

''வாழ்வாவது மாயம்! மண்ணாவது திண்ணம்! வாழ்வை நம்பாதே மனமே, பொய் வாழ்வை நம்பாதே! அவனன்றி ஓர் அணுவும் அசையாது! ஆட்டுவித்தால் யார் ஒருவர் ஆடாதாரே!'' என்ற பலம் பொருந்திய-காற்றோட்டமில்லாத - கட்டுக்காவல் அதிகமாக உடைய-உருக்கு இரும்புக் கோட்டையில்-தலைமுறை தலை முறையாக அடைக்கப்பட்டுள்ள மக்களைப் பார்த்து, ''தென்றல் இன்பத்தை அனுபவித்து ஆநந்தமடையுங்கள். சோம்பல் கொள்ளாதீர்கள். உழைப்புக்கு மதிப்பளியுங்கள். தன்னம்பிக்கை கொள்ளுங்கள்'' என்று பொருள் செறிந்த பேச்சுக்களை அறிஞர்கள் அள்ளி அள்ளி வீசினாலும், தொழில் பெருக்கம் வேண்டுவோர் துடிதுடிப்போடு எடுத்துரைத்தாலும், மக்கள் முன்னேற்றம் விழைவோர் மடமடவென்று வார்த்தைகளைக் கொட்டி அள அள என்று அளந்தாலும் 'யோக நித்தி'ரையில் ஆழ்ந்துகிடக்கும் மக்கள் தேங்கிக்கிடக்கும் சாக்கடையிலிருந்து காட்டாறு நிலைபெறுவது எங்கே?

அறுத்தெறியவேண்டும்சிலந்தி வலையை. வாழ்வு மாயமென்ற புலவர்களின் புல்லறிவின் வீக்கத்தை வீழ்த்தியாக வேண்டும். வீணர்களின் வாயுரையைத்தவிடு பொடியாக்க வேண்டும். மக்கள் அறிவு வெள்ளத்தைத் தடுத்துக் கொண்டிருக்கும் மடமை உருக்கிரும்புக் கோட்டையை சுக்குநூறுகத் தூள் பறக்க உடைத்தெறியவேண்டும். அன்றுதான் இந்தச் சமுதாயம், மனிதவாழ்வின் மாண்புணரும். மாயாவாதத்தின் பொய்மை உணர்ந்து வாழ்வின் இலட்சியத்தை உணர்ந்துகொள்ளும் ஆம்! அறிவியல் புரட்சிவேண்டும். பாழ்பட்ட பழங்காலக் கருத்துக்களைச் சுட்டெரித்துச் சாம்பலாக்க வேண்டும். காலரா போன்ற தொத்து நோய் கண்ட வீட்டில் உள்ள பாய் தலையணைகளையும் கொளுத்தி நீாக்குவதுபோல், மக்கள்முன்னேற்றத்தைக் கெடுத்துத்தடுத்து நிற்கும் கோட்பாடுகளை, அவைகள் ரிஷிகள் சொன்னதானாலும், கடவுள்கள் சொன்னதானாலும், கடவுள் பெயர் கூறிக் கல்நெஞ்சத தந்திரக்காரர்கள் சொன்னதானாலும், துணிவுடன், எதிர்த்து ஒழித்தாக வேண்டும்.

இன்றுநாக, நாட்டில் காண்பது என்ன? அறிஞர்கள் என்போ—ஆத்யார்த்த வாதிகள் என்போர்-என்ன பேசி வருகிறார்கள்? மக்களுக்கு என்னவித போதனையைத் தினம் தவருமல் செய்து வருகிறார்கள்? நினைக்கவே நெஞ்சு நடுங்குகிறதே, இந்த நிலை கெட்டவர்கள் செய்யும் செயலைக் காணும்போது!

முற்காலக் கருத்துக்களுக்குத்தான், மக்களை முன்னேற்றமடையச் செய்யும் சக்தி இருக்கிறதாம்! அதுதான் மெய்ஞ்ஞான மார்க்கமாம்! இந் நாட்டுக் கலாசாரமாம்! கலை ஞானமாம்! வேதாந்தமாம்! வேதாங்கமாம்! அருமையான ஆகமமாம்! உபநிஷதப் பல கனியாம்! கண்ணன் காட்டிய வழியாம்! கர்ம போக மாம்!

ஏட்டிலே, எழுத்திலே, சூது மதியினர்களின் சொற்களிலே, சுக போகிகளின் பேச்சிலே, இவைதான் நிறைந்து இருக்கின்றன. நாட்டிலே-கோடானகோடி மக்கள் உள்ளங்களிலே-மண்டைகளிலே நிறைந்துகிடப்பது என்ன? எதிலும் ஒரு அலட்சியம் எதிலும் ஒருசலிப்பு, எதிலும் ஒரு அவநம்பிக்கை, எதிலும் ஒரு வெறுப்பு, எதிலும் ஒரு அதிருப்தி, இவைதானே மக்களிடைப் பரவிகிற்பதை,நாம் நாள் தோறும் கண்டு வருகிறோம். இதனை மறுத்துக் கூற எவர்களுக்காவது துணிவிருக்கிறதா?

பலமான அஸ்திவாரம் போடப்பட்டு, எழுப்பப்பட்ட கட்டிடத்தில், எங்கெங்கும் வீரலும் வெடிப்பும் இருக்க முடியுமா? இந்தச் சமுதாயக் கட்டிடத்தில் காணுமிடமெங்கும் சரிவும், உடைச்சலும் எண்ணத் தொலையாதன இருக்கின்றனவே? அது ஏன்?

முன்னுள் வாழ்க்கை இலட்சியத்தில் நேர்மையும், நீதியும், வளரும் சக்தியும் இருந்திருக்குமானல், அதனை அடிப்படையாகக் கொண்டு எழுந்துள்ள இன்றைய சமுதாயம், நோஞ்சலாய், நோய் நொடி கொண்டதாய், இருக்கவே தகுதியற்றதாய், அமைந்திருக்க முடியுமா? ஒருக்காலும் முடியாது

மூடமதியும், தன் நம்பிக்கை அற்றதன்மையும், இந்தச் சமுதாயத்தை இன்றும் விட்டுத் தொலையவில்லை என்பதற்கு ஓரே ஒரு எடுத்துக்காட்டு நாடெங்கும், நகரெங்கும் நல்ல ஊரெங்கும், நடுத்தெருவெங்கும், சிறுசிறு சந்தெங்கும் இன்று நாம் காண்பதென்ன?

ஆனைமுகத்தான் - ஆறுமுகத்தான்—ஐந்துதலையான்—அவன் குடும்பம், குடிபடை—மாமன் மைத்துனர் — அரிபரந்தாமன், அவன் உற்றார் உறவினர்-காளி கூளி—வீரன் சூரன்—மாடன் காடன்—இவை அனைத்தும் அன்றோ கொலுவீற்று இருக்கின்றன! மக்கள் புரியவேண்டிய பணியை, வாழ்வுபெற மக்கள் எடுத்துக்கொள்ளவேண்டிய முயற்சியை, நாட்டு முன்னேற்றத்திற்கும்-தொழில் வளர்ச்சிக்கும்-மக்களுக்கு இருந்திர வேண்டிய பொறுப்பை, ஆர்வத்தை, கெடுத்தழிக்கும் தடைக்கற்களாக, இவைகள் இருந்து வருகின்றன. இந்த வெறும் கருங்கற்களை, கடவுள்களாகக் கற்பனைசெய்து, அவைகளிடம் சொந்த வாழ்க்கையை ஒப்படைத்திருக்கும் மக்களைக் கொண்ட சமுதாயம் எங்காவது-என்ருவது உருப்படுமா? பக்தர்களை அல்ல-அறிவு இருக்கிறவர்களைப் பார்த்து இந்தக் கேள்வியைக்கேட்கிறோம், நாணயமான பதில் கூறட்டும் என்று!

களின தூப மிடும பேச்சைக் கொண்டு, அடக்கி ஒழிக்க முனைகிறார்களே ஆளவந்தார்கள்! இந்த நிலையில், சர். விஸ்வேஸ்வரையா கூறுவது போல், ''நமது மக்கள் சோம்பேறித் தனமும் அலட்சியப் போக்கும் உள்ளவர்கள். இதுதான் நமது பிற்போக்கிற்குக் காரணம்''

என்ற பழிச்சொல் நமது சமுதாயத்தை விட்டு எப்படி நீங்கும்?

புதிய 'வாழ்க்கைத்தத்துவம்' தீட்டவேண்டும். 'வாழ்க்கை வாழ்வதற்கே' என்றஉண்மை வற்புறுத்தப் படவேண்டும்.

காட்சி கண்காட்சியே!

...காணடிருககும இந்தியா-
...ர்க்கிலுள்ள ஒரு வான
... 1250 அடி உயரமுள்ள
... காட்சியே படத்தில்

...விம்மலும் நீங்கவழிபிறக்கும் !

வ. உ. சி. நினைவுப் படிப்பகம்

அழகிச்சிபட்டி, செ. 13—

12-9-49 ல் இவ்வூரில் வ. உ. சி. நினைவுப் படிப்பகம் தொந்துவிக்கப் பட்டது. தோழர் மு. மாணிக்கம தலைவராகவும், தோழர் ராம.சோமநாதன் துணைத் தலைவராகவும், தோழர்கள் அ. சுப்பையா, ராம. வெ. முத்தையா செயலாளர்களாகவும், தோழர் ஆறுமுகம் பொருளாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள் எனச் செயலாளர் எழுதுகிறார்.

திருமணம்

தண்டாரம்பட்டு, செப். 11—

களம்பூர் தோழர் நீலகண்டனுக்கும், தண்டாரம்பட்டுத் தோழர் ந. இராசமாணிக்கம் அவர்கள் செல்வி தோழியர் தேவகிக்கும், சென்னை தேர்ழர் S. S. அருணகிரிநாதர் தலைமையில் தண்டாரம்பட்டில் திருமணம் நடந்தேறியது. திருவத்திபுரம் தோழர் மாவண்ணு தேவராசன் தோழர் பா. சேநாபதி மற்றும்பலர் வாழ்த்துரை வழங்கினர். அதன் நினைவாக ரூபாய் ஒன்று வரப்பெற்ருேம். மகிழ்ச்சி.

தேவை

''மாலை மணி''க்கு பழனிக்கு டிபாசிட் கட்டக் கூடிய விற்பனை ஏஜண்ட் தேவை.

மானேஜர், 'மாலை மணி'

வெளிவந்துவிட்டது !

திருக்குறள் இசைப்பாடல்கள்

[அறத்துப்பால்]

பாடுபவர்க்கும் பாடக் கேட்பவர்க்கும் பயனளிப்பவை. தமிழிசைக் கலையிலே குறள் நெறிகாட்டி அறிவுரை நல்கும் அமுத கீதங்கள். எவரும் எங்கும் எப்பொழுதும் பாடுதற்கேற்றவை!

விலை ரூ. 0—8—0

வியாபாரிகட்கு கழிவு 25%

தனிப் பிரதிவேண்டுவோர் 0—9—6 தபால் பில்லையனுப்பவும்.

தென்றல் நூற்பதிப்புக் கழகம்,

சலகண்டபுரம் :: சேலம் மாவட்டம்.

Printed & Published by T. M. Parthasarathy at the Mercantile Press, 2/45. Muthumari Chetty Street, Madras-1.